**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண்: 533** **நாள்: 02.10.2026**

**ஆலந்தூர் மற்றும் அடையாறு மண்டலங்களில் மேற்கொள்ளப்பட்டு வரும் மழைக்கால முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை இணை ஆணையாளர் (பணிகள்) திரு.செ.சரவணன், இ.ஆ.ப., அவர்கள் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.**

பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் வடகிழக்குப் பருவமழையினை முன்னிட்டு, மழைநீர் வடிகால்கள், வண்டல் வடிகட்டித் தொட்டிகளில் தூர்வாருதல், கால்வாய்கள் மேம்பாடு மற்றும் தூர்வாருதல், நீர்நிலைகளில் படர்ந்துள்ள ஆகாயத்தாமரை மற்றும் கழிவுகளை அகற்றுதல் உள்ளிட்ட முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இதன் ஒரு பகுதியாக, இணை ஆணையாளர் (பணிகள்) திரு.செ.சரவணன், இ.ஆ.ப., அவர்கள், இன்று (02.10.2026) ஆலந்தூர் மண்டலம், வார்டு-162குட்பட்ட ஆதம்பாக்கம் ஏரி, வார்டு-165குட்பட்ட பாலாஜி நகர் பகுதியில் உள்ள கால்வாய், அடையாறு மண்டலம், வார்டு-176குட்பட்ட வேளச்சேரி எம்.ஆர்.டி.எஸ். உள்வட்ட சாலையில் உள்ள வீராங்கல் ஓடை உள்ளிட்டவற்றைப் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, பணிகளை விரைந்து முடித்திட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இந்த ஆய்வுகளின் போது, தெற்கு வட்டார துணை ஆணையாளர் திரு.அஃதாப் ரசூல், இ.ஆ.ப., அவர்கள் மற்றும் மாநகராட்சி அலுவலர்கள் உடனிருந்தனர்.

**செய்தி வெளியீடு: இணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**